FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| juk;:- 13 (2018) | murpay; tpQ;Qhdk; | Neuk;:- ,uz;L kzpj;jpahyk; |
|---|---|---|

### பகுதி - I

❖ ***1 முதல் 15 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுகள் சரியானவையாகும். சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.***

1) அரசியல் விஞ்ஞானம் கவனம் செலுத்தும் கற்கைகளாவன.

A - மக்களின் அரசியல் நடத்தை பற்றிய கற்கை.

B - மக்கள், அரசாங்கம் மற்றும் அரசுக்கிடையிலான தொடர்பு பற்றிய கற்கை.

C - சமூக அதிகாரத்தின் இயல்பும் அதன் மீதான வரையறைகளின் மூலங்களும்

D - அதிகார நடைமுறைப்படுத்தலுக்கான உபாய நுட்பங்கள்

E - அரசியல் செயற்பாட்டாளர்களின் குணாம்சங்களை பரிசீலித்தல்

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

agaram.lk

2) அரசியல் என்பது,

A - அனுபவம் சார்ந்த காரணிகளை அடிப்படையாக் கொண்டு இயங்கும் ஒரு கலையாகும்.

B - அரசியல் வாதிகளும், அரசியற் கட்சிகளும் பிரதான செயற்பாட்டாளர்களாகும்.

C - முரண்பட்ட நிலைகள் ஏற்படுவது தவிர்க்கப்பட்டிருக்கும்.

D - யார், எதனை, எப்போது, எவ்வாறு பெற்றுக் கொள்வர் என்ற அடிப்படையில் செயற்படும்.

E - ஜனநாயக முறையிலோ அல்லது ஜனநாயக விரோத முறையிலோ செயற்படலாம்.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

3) நடத்தை வாதமானது,

A - எதிர்வு கூறக்கூடிய ஆற்றலையடைய அனுபவம் சார் கோட்பாடுகளைக் கட்டியெழுப்ப உதவுகின்றது.

B - பிரான்சிய அரசியல் விஞ்ஞானிகளின் முயற்சியின் பயனாகும்.

C - கோட்பாடுகளை விட மனித நடத்தைகளுக்கு முக்கியமளிக்கின்றது.

D - ஆராய்ச்சிகள் மற்றும் புள்ளிவிபரப் பகுப்பாய்வினூடாக அளவிடக்கூடிய தரவுகளின் சேகரிப்போடு தொடர்புபடுகின்றது.

E - விஞ்ஞான நுட்பமுறைகள் அதிகம் உள்ளீர்ப்பதை விரும்புகின்றது.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

4) அரசு என்பது,

A - தனித்துவமான அரசியல் கட்டமைவுகளைக் கொண்ட ஓர் அரசியல் ஒழுங்கமைப்பாகும்.

B - பல்வேறுபட்ட சிந்தனவாதக் குழுவினரால் ஒருமித்த கண்ணோட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

C - சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளராகும்.

D - இறைமை அதிகாரத்தின் ஒரே உரித்தாளியாகும்.

E - அரசின் முகவராக அரசாங்கம் செயற்படும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

5) அரசாங்கம் என்பது,

A - அரசின் ஆள்புலப் பிரதேசத்தில் வாழும் சகல மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும்.

B - அரசின் பெயரால் இறைமையதிகாரத்தை நடைமுறையில் பிரயோகிக்கின்றது.

C - தேசிய மட்டத்தில் ஒற்றையாட்சி அல்லது சமஷ்டியாட்சி என்ற அடிப்படையில் ஒழுங்கமையும்.

D - அரசாங்க கட்டமைப்புகள் நாட்டிற்கு நாடு வேறுபட்டு அமைகின்றன.

E - அரசின் அரசியல் தளத்தைக் குறிக்கும் அமைவுச் சேர்க்கை மூலக்கூறுகளில் ஒன்றாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

6) அரசாங்கத்தின் பணிகளாவன,

A - ஆள்புல எல்லைகளைப் பாதுகாத்தல்.

B - தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பல்

C - கல்வி மற்றும் அடையாளப் பணிகளை மேற்கொள்ளல்.

D - தேசிய கௌரவத்தையும், நலனையும் மேம்படுத்தல்.

E - சமூக பொதுநலப் பணிகளில் இருந்து முழுமையாக விலகியிருத்தல்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

7) ஒற்றையாட்சி அரசாங்கமானது,

A - ஒரு தனி மத்திய அரசாங்கத்தில் இறைமை அதிகாரம் செறிந்திருத்தல்.

B - ஒற்றை நிர்வாக மற்றும் நீதி முறைமையைக் கொண்டிருக்கும்.

C - பல்லின சமூகங்கள் வாழும் நாடுகளுக்கு பொருத்தமான ஆட்சி முறையாகும்.

D - அதிகம் செயற்றிறன் மிக்கதும் ஜனநாயகத் தன்மை குறைந்ததுமாகும் எனக் கருதப்படுகின்றது.

E - மத்திய அரசினால் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படும்.

*1.* ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

8) சமஷ்டி அரசாங்கம் என்பது,

A - அமெரிக்க அரசியல் திட்டத்தின் மூலம் உலகளவில் பிரபல்யமடைந்தது.

B - சமஷ்டி அலகுகளுக்கு சமமான கவனிப்புக் கொள்கை.

C - மத்திக்கும் பரிதிக்குமிடையில் நிலைக்குத்து அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் இயங்கும் ஓர் அரசாங்க முறையாகும்.

D - செலவு குறைந்த வினைத்திறனான அரசாங்க முறையாகும்.

E - அரசியலமைப்பின் பாதுகாவலனாக சுதந்திரமான உச்ச நீதிமன்றம் காணப்படும்.

*1.* ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

agaram.lk

9) மந்திரி சபை அரசாங்க முறை என்பது,

A - அரசியற்கட்சி அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகின்றது.

B - ஜனநாயக தன்மை வாய்ந்ததாயினும், செயற்றிறன் குன்றிய முறையாகும்.

C - வலுவேறாக்க கொள்கை சிறப்பாக பினபற்றப்படும் முறையாகும்.

D - நாமநிர்வாகம், உண்மை நிர்வாகம் என இரு பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

E - சட்டத்துறைக்கும், நிறைவேற்றுத்துறைக்குமிடையில் அண்மித்த தொடர்பு காணப்படும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

10) ஜனாதிபதி அரசாங்க முறை என்பது,

A - அரசியல் ரீதியாக உறுதியானதற்கு பலமான நிறைவேற்றுத்துறை நிலை பெற்றுள்ளது.

B - மக்களால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தெரிவு செய்யப்படலாம்.

C - பலகட்சி முறை நிலவும் நாடுகளுக்கு அதிகம் பொருந்துகின்ற முறையாகும்.

D - சட்டத்துறையினால் நம்பிக்கையில்லாத் தீர்மானித்தின் மூலம் பதவி நீக்கப்படுதல்.

E - ஜனநாயக தன்மை குறைந்ததாயினும், செயற்றிறன் மிக்க முறையாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

11) அரைகுறை ஜனாதிபதி அரசாங்க முறை என்பது,

A - ஐந்தாம் குடியரசு யாப்பு மூலம் பிரான்சில் அறிமுகமான ஒருமுறையாகும்.

B - ஒரு கட்சி முறை நிலவும் நாடுகளுக்கு அதிகம் பொருந்தும் முறையாகும்.

C - ஜனாதிபதி அரசாங்க முறை மற்றும் பாராளுமன்ற அரசாங்க முறை ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்டதாகும்.

D - இரட்டை நிறைவேற்றுத்துறையின் கீழ் செயற்படும் முறையாகும்.

E - ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுகிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

12) அனைத்தாண்மை அரசாங்க முறை என்பது,

A - சட்டத்திற்கு கீழ்ப்படியாத அல்லது தன்னிச்சையான ஆட்சியாக இருத்தல்.

B - நிர்வாக இயந்திரம் ஆதரவு நல்கும் முறையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல்.

C - காலத்திற்கு காலம் நியாயமான முறையில் ஆட்சியாளர்கள் தெரிவு செய்யப்படுதல்.

D - நிச்சயமான அரசியல், பொருளாதார தத்துவமின்றி ஆட்சி புரிதல்.

E - ஆட்சியாளர்களிடம் வெளிப்படைத் தன்மை காணப்படாமை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

agaram.lk

13) முதலாளித்துவ அரசாங்கத்தின் பிரதான பண்புகளான,

A - வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தையும், சமூக நலன்புரி விடயங்களையும் முதன்மைப்படுத்தும் முறையாகும்.

B - பொருளாதாரத்தைக் கட்டுப் படுத்துவதில் அரசாங்கத்தின் குறைந்த பட்ச தலையீடு காணப்படல்.

C - தனியார் சொத்துடமைக்கம், சுதந்திர முயற்சிக்கும் முன் உரிமையளித்தல்.

D - திறந்த சந்தை முறையினை ஏற்றுக் கொள்ளுதல்.

E - தாராள ஜனநாயகத்தோடு இணைந்த செயற்பாடாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

14) சமதர்ம அரசாங்க முறையின் பிரதான பண்புகளாவன.

A - மத்தியமயப்படுத்தப்பட்ட பொருளாதாரமுறை நிலவுதல்.

B - தனியார் சொத்துடமை அங்கீகரிக்கப்படாமை.

C - ஒரு கட்சி சர்வாதிகாரம் நிலைபெறல்.

D - அரசியல் சுதந்திரத்தை அர்ப்பணிப்பதனடிப் படையிலமைந்த பொருளாதாரச் சமத்துவம்.

E - ஜனநாயக மூலக்கொள்கைளின் அடிப்படையில் அரசாங்க கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டிருக்கும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

15) ஜனநாயக அரசாங்க முறையின் பிரதான பண்புகளாவன.

A - போட்டிக்கட்சி முறையும் காலந்தவறாத சுதந்திரமான தேர்தல்களும்.

B - நீதித்துறை மற்றும் ஊடக துறை சுதந்திரங்கள் காணப்படல்.

C - அடிப்படை உரிமைகள் தொடர்பான உறுதிப்பாடு.

D - ஜனநாயக கட்டமைப்புக்கள் அரசாங்கத்தினுள் பெயரளவு உருவாக்கப்படல்.

E - அரசியல் யாப்புக்கு முதன்மையளித்தல்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

❖ ***16 முதல் 21 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒரு கூற்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்க.***

agaram.lk

16) வலுவேறாக்க கோட்பாடானது,

1) சாள்ஸ் மொன்டஸ்கியூவினால் கோட்பாட்டு வடிவம் வழங்கப்பட்டது.
2) அரசாங்கத்தின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்பன பிரிக்கப்பட்ட வேண்டுமென வலியுறுத்துகின்றது.
3) அமெரிக்க அரசாங்க கட்டமைப்பில் இவை பின்பற்றப்படுவதை பொதுவாக காணலாம்.
4) அதிகாரப் பகிர்வுக்கு இது தடையாக அமையும் முறையாகும்.
5) சுதந்திரம் பாதுகாக்கப்படுவதற்கு அவசியமான ஒன்றாகும்.

17) தற்கால அரசாங்கங்களின் சட்டத்துறையானது,

1) அரசாங்கத்தின் முத்துறைகளுள் அதிகாரமும் செல்வாக்கும் உடையது.
2) தனிமன்றமாகவோ அல்லது இருமன்றமாகவோ ஒழுங்கமையலாம்.
3) பொது நிதியின் பிரதான கட்டுப்பாட்டாளராகச் செயற்படுகிறது.
4) கொள்கையாக்கம், சட்ட உருவாக்கத்தின் முதன்மை செயற்பாட்டாளராகும்.
5) உயர் அரசியல் கலாசாரம் கொண்ட நாடுகளில் சிறப்பாக செயற்படுகின்றது.

18) நவீன ஜனநாயக அரசாங்கங்களிலுள்ள நிறைவேற்றுத் துறையானது,

1) சட்டங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றுகின்ற உயர் தாபனமாகும்.
2) அரசாங்க மாதிரிகளுக்கு ஏற்ப வேறுபட்டு அமையும்.
3) அரசின் அதிகாரபூர்வமான பெறுமானங்களின் பங்கீடைத் தீர்மானிக்கின்றது.
4) அரசியல் யாப்பு, வலுவேறாக்கம், எதிர்க்கட்சி என்பவற்றால் கட்டுப்படுத்தப்படலாம்.
5) சட்டங்களுக்கு வியாக்கியானம் அளிக்ககூடிய அமைப்பாகும்.

19) நீதித்துறை என்பது,

1) நீதியினதும் நேர்மையினதும் உயர் பாதுகாவலன் எனக் கருதப்படுகின்றது.
2) நீதித்துறை சுயாதீனம் என்ற தத்துவத்தின் படி செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
3) பக்கச் சார்பற்ற வகையிலும், தாமதமின்றியும் பணியாற்ற நிர்ப்பந்திக்கப்படுகின்றது.
4) சட்டத்துறையின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே செயற்பட வேண்டியுள்ளது.
5) நீதித்துறை சுதந்திரத்தை உறுதிப்படுத்துலதற்கான ஏற்பாடுகள் அரசியல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

20) ஜனநாயக பிரதிநிதித்துவம் சிறப்பாக அமைவதற்கு,

1) போட்டிக் கட்சி முறை நிலவ வேண்டும்.
2) தேர்தல் காலங்களில் மாத்திரம் பிரதிநிதிகள் வாக்காளர் தொடர்பு நிலவ வேண்டும்.
3) பிரதி நிதிகளும், வாக்காளர்களும் அரசியலறிடையவர்களாக இருக்க வேண்டும்.
4) மக்களின் மனக்குறைகள், தேவைகள் சட்டவையில் முன்வைக்கப்பட வேண்டும்.
5) பொதுசன அபிப்பிராயம் நிலைபெறுவதற்கான சூழல் கட்டியெழுப்பப்படல்.

21) அரசியற் கட்சிகளின் பணிகளாவன,

1) வாக்காளருக்க அரசியற் கல்வியை வழங்கல்.
2) சிதறிக் காணப்படும் பொதுசன அபிப்பிராயங்களை ஒன்று திரட்டுதல்.
3) அரசாங்கத்தை அமைப்பதில் புத்தி ஜீவிகளின் பங்கை நிராகரித்தல்.
4) சமூக சீர்திருத்தத்தின் முதன்மையான பிரதிநிதிகளாகச் செயற்படல்.
5) அரசியற் தலைவர்களை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தல்.

❖ **22 முதல் 26 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் பிழையானவையாகும். பிழையான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

22) அமுக்கக் குழுக்கள் என்பவை,

A - அரசியல் அதிகாரப் போட்டியில் நேரடியாக ஈடுபடாத குழுக்களாகும்.

B - தமது தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற பிழையான தகவல்களை அரசாங்கத்துக்கு வழங்குகின்றன.

C - ஜனநாயக நாடுகளில் உள்ள சுதந்திரம் காரணமாக இவை சிறப்பாக செயற்படுவதில்லை.

D - தேர்தல் முடிவுகளில் அமுக்கக் குழுக்களின் நடவடிக்கைகள் பாதிப்புச் செலுத்துவதில்லை.

E - அமுக்கக் குழுக்களுடன், அரசியற் கட்சிகள் எவ்வித தொடர்புகளையும் பேணமுன் வருவதில்லை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

23) சர்வதேச அரசியல் என்பது,

A - அரசுகளுக்கும் சர்வதேச அரசுசார்பு அமைப்புகளுக்குமிடையிலான அரசியலாகும்.

B - ஒவ்வொரு தேசிய அரசும் இதன் பிரதான செயற்பாட்டாளராகும்.

C - வல்லரசுக்களுக்கும் பயங்கரவாதக் குழுக்களுக்குமிடையிலான மோதலாகும்.

D - ஐ. நா சபையுடன் மாத்திரம் இணைந்த ஒரு செயற்பாடாகும்.

E - இறைமை அடிப்படையில் வேறுபாடு காட்டப்பட்ட பெரிய, சிறிய அரசுகளுக்கிடையிலான செயற்பாடாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

agaram.lk

24) பொதுக் கொள்கைகள் என்பவை,

A - அரசாங்கத்தாலும், தனியார் துறையினராலும் உருவாக்கி நடைமுறைப்படுத்தப் படுபவையாகும்.

B - ஆளும் கட்சி உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்ற பயன்படுபவை.

C - சர்வதேச நிறுவனங்களின் கொள்கைகளை அரசு செயற்படுத்தும் போது பொதுக் கொள்கை என அழைக்கப்படும்.

D - தனியாக பாராளுமன்றத்தினால் உருவாக்கப்படும் கொள்கைகளாகும்.

E - பொதுவான இலக்குகளுக்காக, அரசாங்கத்தால் நடைமுறைப் படுத்தப்படும் கொள்கைகளாகும்.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

25) சமூக மோதல்கள் என்பவை,

A - தனிமனித நடத்தையின் ஒரு சமூக பெறுமானமாக இது கருதப்படுவதில்லை.

B - இனத்துவம் பிரதேச வேறுபாடு அடிப்படையில் மோதல்கள் ஏற்படுவதில்லை.

C - தனிமனித தேவைகள், ஆசைகள் மோதல்களுக்கு காரணமாக அமைந்து வளர்ச்சியடையலாம்.

D - அதிகாரப் பங்கீடு தொடர்பாக சமஷ்டி நாடுகளில் மத்திய – மாநில அரசாங்கங்களுக்கிடையிலான மோதலாகும்.

E - சமூக மோதல்களுக்கான காரணங்களைக் கண்டறிவது அரசாங்கத்தின் பணியாக கருதப்படுவதில்லை.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

agaram.lk

26) தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் அரசாங்க முறைகளிலுள்ள சட்டத்துறை.

A - பிரித்தானிய பாராளுமன்றின் இருசபைகளும் சமமான அதிகாரங்களைக் கொண்டுள்ளன.

B - அமெரிக்க சட்டத்துறை காங்கிரஸ் எனப்படுகின்றது.

C - இந்திய பாராளுமன்றின் லோக்சபா, இராஜ்யசபா என்பன சமமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளன.

D - பிரான்ஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றாலும், தொடர்ந்து உறுப்பினராக இருக்கலாம்.

E - சுவிஸ்லாந்து சமஷ்டி மன்றின் உறுப்பினர்கள் சமஷ்டிப் பேரவையில் இடம் பெறுகின்றனர்.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

❖ **27 முதல் 40 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுகள் மாத்திரம் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

27) 1833 கோல்புறூக் - கமரன் யோசனைகளை நடைமுறைப்படுத்தியதால் ஏற்பட்ட விளைவுகளாவன,

A - பாராளுமன்ற முறையிலமைந்த அரசியல் முறைமையின் விருத்திக்கான ஆரம்பத் தளமிடப்பட்டமை.

B - சந்தைமுறைப் பொருளாதாரம் விருத்தியடைவதற்கான தளமிடப்பட்டமை.

C - மானிய முறை வீழ்ச்சியும், சாதிமுறை தளர்வுற்றமையும்.

D - வாழ்வாதார விவசாயம் வளர்ச்சியுற்றமை.

E - சுதந்திரமானதும், நீதியானதுமான ஒரு நீதிமுறைமை ஆரம்பிக்கப்பட்டமை.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

28) 1910 – 1924 காலப்பகுதியில் இடம்பெற்ற அரசியமைப்புச் சீர்திருத்தங்கள் மூலம்

A - சட்டமன்றின் இனவாரிப் பிரதிநிதித்துவம் முழுமையான ஒழிக்கப்பட்டது.

B - பிரதேசவாரியான தெரிவு முறை படிப்படியாக அதிகரித்தது.

C - சட்டமன்றின் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது.

D - சட்டமன்றின் பிரதிநிதித்துவத் தளம் பரவலாக்கப்பட்டது.

E - சட்டமன்றின் உத்தியோகத்தரல்லாத உறுப்பினர்களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டது.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

29) இலங்கைத் தேசிய காங்கிரஸ்,

A - பிரித்தானியருக்கு எதிரான நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பாகும்.

B - 1919 இல் ஆரம்பிக்கப்பட்டது.

C - இதன் முதலாவது தலைவர் சேர்.பொன். அருணாசலம் ஆவார்.

D - உள்ளகப் பிளவுகளின் காரணமாக பலவீனப்பட்டது.

E - மகாஜன இயக்கமாக சுதந்திரத்திற்கான முழுப்பங்களிப்பை வழங்கியது.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

agaram.lk

30) 1931 – டொனமூர் சீர்திருத்தங்கள் மூலம் முன்மொழியப்பட்டவை.

A - 21 வயதிற்கு மேற்பட்டோருக்கு சர்வசன வாக்குரிமை

B - சட்டவாக்க, நிறைவேற்றுப்பணிகள் ஒப்படைக்கப்பட்ட அரசுக்கழகம்.

C - ஏழு நிறைவேற்றுக் குழுக்களின் தலைவர்களும் உறுதியாக அமைச்சராகலாம்.

D - அரசுக் கழகத்தின் 57 உறுப்பினர்கள் ஏழு நிறைவேற்றுக்குழுக்களாயினர்.

E - சுதந்திரமான பொதுச் சேவை ஆணைக்குழு.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

31) 1931 சர்சவனவாக்குரிமையால் ஏற்பட்ட விளைவுகளாவன.

A - பொறுப்பரசாங்க முறைக்கு வித்திட்டமை.

B - பிரதிநிதித்துவ ஜனநாயகம் வளர்ச்சியுற்றமை.

C - சமூக மாற்றங்கள் துரித மடைந்தமை.

D - சமூக நலன்புரி விடயங்கள் வீழ்ச்சியடைந்தமை.

E - அரசியற் கட்சிகள் தோன்றுவதற்கான பின்னணி உருவானமை.

1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

32) 1931 – டொனமூர் அரசாங்கத்திலிருந்த மூன்று அரச அதிகாரிகள்.

A - தேசாதிபதியும், மூன்று அரச அதிகாரிகளும் புறம்பான ஒரு குழுவாக இயங்கினர்.
B - இலங்கை அமைச்சர்களுக்கு சமமான அதிகாரங்களைப் பெற்றிருந்தனர்.
C - யாப்பின் 'காவல் நாய்கள்' என அழைக்கப்பட்டனர்.
D - டொனமூர் இரண்டாந்தவணைக் காலப்பகுதியில் அமைச்சரவைக்கான இவர்களின் பங்களிப்புக் குறைவடைந்தது.
E - அரசுக் கழகத்திற்கு பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருக்கவில்லை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

33) 1947 சோல்பரி பாராளுமன்றம்.

A - ஈரங்க மன்றமாக அமைந்தது.
B - சட்ட ஆக்கத்தில் பூரண இறைமையை பெற்றிருக்கவில்லை.
C - தெரிவு செய்யப்பட்டவர்களும், நியமன உறுப்பினர்களும் இடம் பெற்றனர்.
D - அரசாங்கத்திற்கான பெரும்பான்மை பலத்தை வழங்கியது.
E - மகாதேசாதிபதியை குற்றவிசாரணை மூலம் பதவி நீக்க முடிந்தது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

34) 1947 – சோல்பரி மகாதேசாதிபதி

A - அமைச்சரவையின் தலைவராவார்.
B - பிரித்தானிய முடியினால் நியமிக்கப்பட்டார்.
C - அரசின் தலைவராகச் செயற்பட்டார்.
D - பிரித்தானிய அரசியற் சம்பிரதாயங்களைப் பின்பற்றினார்.
E - நாம நிறைவேற்றாளர் எனும் நிலையினை வகித்தார்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

35) 1947 – சோல்பரி மந்திரி சபை

agaram.lk

A - மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டது.
B - செனட் மன்றிலிருந்தும் அமைச்சர்கள் நியமிக்கப்படலாம்.
C - பிரித்தானிய மன்னரால் தலைமை தாங்கப்பட்டது.
D - பிரித்தானிய பாராளுமன்ற சம்பிரதாயங்களைப் பின்பற்றியது.
E - பாராளுமன்றிற்கு கூட்டாக பொறுப்புக்கூற வேண்டியிருந்தது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

36) 1947 – சோல்பரி யாப்பின் குறைபாடுகளாவன,

A - பிரித்தானிய முடி அரசதலைவராக தொடர்ந்தும் இருந்தார்.
B - சிறுபான்மையினர் காப்பீடுகள் இடம்பெற்றிருக்கவில்லை.
C - அடிப்படை உரிமைகள் எழுதப்படவில்லை.
D - இலங்கை சார்பாக பிரித்தானிய பாராளுமன்றம் சட்டமியற்ற முடிந்தமை.
E - மேன் முறையீட்டு நீதி அதிகாரம் பிரித்தானிய கோமறைக் கழகத்திடம் காணப்பட்டமை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

37) 1972 முதலாம் குடியரசு யாப்பின் பிரதான பண்புகள்.

A - இறைமையும், தன்னாதிக்கமும் உடைய குடியரசு.
B - மீயுயர் அதிகாரம் கொண்ட தேசிய அரசுப் பேரவை.
C - மகாதேசாதிபதிக்குப் பதில் ஜனாதிபதி.
D - வலுவேறாக்க தத்துவம் பின்பற்றப்பட்டமை.
E - ஓரளவுக்கு மதிப்பிறக்கப்பட்ட நீதித்துறை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

38) 1972 – தேசிய அரசுப் பேரவை,

A - மூன்று துறை அதிகாரங்களையும் கொண்டிருந்தது.

B - ஆறு வருட பதவிக்காலத்தைக் கொண்டிருந்தது.

C - கீழ் சபை, மேல்சபை என இருமன்றுகளைக் கொண்டிருந்தது.

D - பாராளுமன்ற இறைமைக் கொள்கையின் அடிப்படையிலமைந்தது.

E - மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை மாத்திரம் உள்ளடக்க வேண்டுமெனக் கூறப்பட்டது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

39) 1972 யாப்பின் கீழ் உண்மை நிருவாகம்,

A - பிரதமரால் தலைமை தாங்கப்பட்டது.

B - அமைச்சரவை என்றழைக்கப்பட்டது.

C - நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவிநீக்க முடிந்தது.

D - சட்டமன்றிற்கு பொறுப்புக் கூறவேண்டியிருந்தது.

E - நாம நிருவாகத்தின் விருப்புக்கு ஏற்ப செயற்பட வேண்டியிருந்தது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

40) 1972 – யாப்பின் அடிப்படை உரிமைகளாவன.

A - இலங்கைப் பிரசைகளுக்கு மாத்திரம் உரித்தாக்கப்பட்டது.

B - நீதிமன்ற பாதுகாப்பை பெறக்கூடிய ஏற்பாடுகள் இருந்தமை.

C - வரையறைகளுக்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தமை.

D - யாப்பலங்காரமாக அமைந்தது என விமர்சிக்கப்பட்டது.

E - முதல் முயற்சி என்ற வகையில் பாராட்டைப் பெற்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

❖ **41 தொடக்கம் 48 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒரு கூற்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்க.**

agaram.lk

41) 1978 இல் பிரகடனப்படுத்தப்பட்ட இரண்டாம் குடியரசு யாப்பு,

1) ஜனாதிபதியையும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சர் குழுவையும் உள்ளடக்கிய ஒரு கலப்பு நிறைவேற்றுத்துறை உருவாக்கப்பட்டது.
2) அரைகுறை இறைமை கொண்ட பாராளுமன்றம் தாபிக்கப்பட்டது.
3) எளிய பெரும்பான்மை தேர்தல் முறைக்குப் பதிலாக விகிதாசார பிரதிநிதித்து தேர்தல் முறையை அறிமுகப்படுத்தியது.
4) பிரதமரை நாம நிருவாகமாக மதிப்பிறக்கம் செய்தது.
5) உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களைக் கொண்ட மேனிலை நீதிமன்ற முறையைத் தாபித்தது.

42) 1978 நிறைவேற்று ஜனாதிபதி பதவி தொடர்பாக,

1) ஜனாதிபதி வேட்பாளர் 35 வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
2) நிறைவேற்றதிகாரம் தற்பொழுது முழுமையாக ஒழிக்கப்பட்டுள்ளது.
3) ஐந்து வருட பதவிக் காலத்து மக்களால் நேரடியாகத் தெரியப்படல்.
4) குற்ற விசாரணை மூலம் பதவி நீக்கப்படலாம்.
5) பாராளுமன்றிற்கு பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளார்.

43) 1978 பாராளுமன்றமானது,

1) தெரியப்பட்டவர்களையும் நியமிக்கப்பட்டவர்களையும் கொண்டதாகும்.
2) ஐந்து வருட ஆயுட்காலத்தைக் கொண்டது.
3) 225 உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.
4) சட்டமூலகங்களுக்கு இறுதியா சபாநாயகர் கையொப்பமிடுகின்றார்.
5) உறுப்பினர் வெற்றிடமானால் இடைத்தேர்தல் மூலம் நிரப்பப்படும்.

44) விகிதசம பிரதிநிதித்துவ முறையின் நிறைகளாவன,
1) வாக்குத் தொகைக்கு சமாந்திரமான முறையில் நியாயமான பிரதிநிதித்துவம் கிடைத்தல்.
2) மக்கள் அபிப்பிராயம் உருமாறாது சட்டசபையில் பிரதிபலிக்கப்படல்.
3) பிரதிநிதிக்கும் வாக்காளர்களுக்குமிடையிலான தொடர்பு சேய்மையானதாக இருத்தல்.
4) ஆளும் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் செல்வாக்குச் செலுத்த முடியாது.
5) சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் போதிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.

45) 1978 – உயர்நீதிமன்றம் தொடர்பாக,
1) நீதிப்புனராய்வு அதிகாரத்தைக் கொண்டது.
2) நீதியரசர்கள் அரசியலமைப்பு பேரவையின் சிபார்சுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர்.
3) அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் தத்துவம் கொண்டது.
4) இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கமுடையது.
5) ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனுக்களை விசாரிக்கலாம்.

46) இலங்கையின் மாகாண சபைகள்.
1) அதிகார பரவலாக்கல் அலகாக அறிமுகப்படுத்தப்பட்டது.
2) 13 ஆவது யாப்புத் திருத்தம் மூலம் உருவாக்கப்பட்டது.
3) பிரதான நிறைவேற்றதிகாரியாக ஆளுநரைக் கொண்டது.
4) நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு அதிகாரமில்லை.
5) நாட்டின் இனப்பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்டது.

47) இலஞ்சம், ஊழல்கள், துஷ்பிரயோகங்கள் என்பவற்றை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்.
1) மோசடிகளைத் தடுப்பதற்கான மனநிலை உருவாக்கப்பட்டுள்ளமை.
2) லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு செயற்படுகின்றமை.
3) நிதிக்குற்ற புலனாய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டமை.
4) கோப் குழு தலைமை பதவி எதிர்கட்சி உறுப்பினருக்கு வழங்கப்பட்டமை.
5) பாரிய நிதிமோசடிகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு தாபிக்கப்பட்டமை.

48) தகவல் உரிமைச் சட்டம் தொடர்பாக,
1) அப்படை உரிமைகளுடன் இணைக்கப்பட்டமை.
2) எவ்வித வரையறைகளும் உடட்படாமல் தகவல்களைப் பெறுவதற்கான சுதந்திரம்.
3) 19 ஆவது யாப்புத்திருத்தத்தின் மூலம் அறிமுகமானது.
4) தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவை தோற்றுவித்தது.
5) இலங்கைக்கு சர்வதேச புகழை ஈட்டித்தந்த விடயங்களில் ஒன்றாகும்.

❖ 18 ஆவது, 19 ஆவது யாப்புத்திருத்தம் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 49ஆம், 50 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - ஜனாதிபதி பதவிக்கு ஒருவர் இரு தடவைகள் தோற்றலாம் என்ற வரையறை நீக்கப்பட்டமை.
B - அரசியலமைப்பு பேரவை தாபிக்கப்பட்டமை.
C - பாராளுமன்றப் பேரவை தாபிக்கப்பட்டமை.
D - தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டது.
E - பிரதமரை நியமித்தல் நீக்கம் செய்யமுடியாது.
F - கணக்காய்வு சேவை ஆணைக்குழு அறிமுகம்.
G - மூன்று மாதத்திற்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்குள் ஜனாதிபதி பாராளுமன்றம் வருகை தர வேண்டும்.
H - ஜனாதிபதி தொடர்பாக அடிப்படை உரிமை வழக்குத் தாக்கல் செய்யப்படலாம்.
I - பகிரங்க சேவை தொடர்பான சுயாதீன தன்மை அற்றுப் போனமை.
J - இரட்டைப் பிரஜாவுரிமை உடையோர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது.

49) 18 ஆவது யாப்புத் திருத்தம் தொடர்பாக சரியான கூற்றுக்களின் தொகுதி
1. ACGI 2. BDGH 3. ACFJ 4. CEHI 5. BCIJ

50) 19 ஆவது யாப்புத் திருத்தம் தொடர்பாக சரியான கூற்றுக்களின் தொகுதி.
1. ACDE 2. CEHI 3. BEFH 4. CFGJ 5. DGIJ

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 13 (2018) | அரசியல் விஞ்ஞானம் II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி II**

**பகுதி A**

❖ **பகுதி A இன் 20 குறு வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

01. i) "அரசு என்பது சமூகப் படிமுறை வளர்ச்சியின் விளைவினதாகும்."

ii) "அரசியல் விஞ்ஞானப்பாடத்தின் கருப்பொருளாக அரசும் அரசாங்கமும் காணப்படுகின்றன.

இக்கூற்றுக்களை வெளியிட்டோரை முறையே குறிப்பிடுக.

i. ………………………………………………………………………………………………

ii. ………………………………………………………………………………………………

02. i) அரசியல் விஞ்ஞானம் ஒரு பாடமாக கற்க ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியை குறிப்பிடுக.

ii) "அரசியல்" என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்திய சிந்தனையாளரையும் பெயரிடுக.

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

03. கிரேக்க நகர அரசுகளில் நேரடி ஜனநாயகம் இரு காரணங்களினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ் இரு காரணங்களையும் குறிப்பிடுக.

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

04. i) "சமூகப் பொறிமுறைகளையும் தனியாட்களின் அரசியல் நடத்தையையும் விளங்கிக் கொள்வதற்கு இவ்வணுகுமுறை உதவும்"

ii) "விஞ்ஞான நுட்பமுறைகள் பயன்படுத்தப்படுவதோடு, பண்பாட்டு விடயங்களை கருத்திலெடுப்பதில்லை." இவ்விரு அணுகுமுறைகளையும் முறையே குறிப்பிடுக.

i. ………………………………………………………………………………………………

ii. ………………………………………………………………………………………………

05. i) "சமூகப் பொது நன்மைக்காகவே அரசு உருவாக்கப்பட்டது"

ii) "தனிமனித உரிமைகளை தியாகம் செய்வதனூடாக தனது இருப்பை பாதுகாக்க முடியும்"

ஆகிய கூற்றுக்களை குறிப்பிட்ட சிந்தனவாத குழுவினரை குறிப்பிடுக.

i. ………………………………………………………………………………………………

ii. ………………………………………………………………………………………………

agaram.lk

06. "சிவில் அரசாங்கத்தின் இரு உடன்படிக்கைகள்" மற்றும் "குடியரசு" ஆகிய நூல்களினது ஆசிரியர்களைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

07. குற்றவிசாரணை மூலம் பதவிநீக்ககூடிய அரசாங்க முறையையும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் பதவி நீக்ககூடிய அரசாங்க முறையையும் முறையே குறிப்பிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

08. "மனிதப் பிறவிகளின் பௌதிக இருப்பானது இரு வேறுபட்ட மூலங்களிலிருந்து தோற்றம் பெறும் இரு தொகுதிச் சக்திகளினால் ஆனப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகின்றது" அவ் இரு மூலங்களையும் அடையாளம் கண்டு பெயரிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

09. "அரசியல் யாப்புக்கான அந்தஸ்தினை இரு வகையில் நோக்கலாம்" அவ்விரு விடயங்களையும் குறிப்பிடுக."

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

10. இறைமைக் கோட்பாட்டை முன்வைத்தவரையும், வலுவேறாக்க கோட்பாட்டை முன்வைத்த அறிஞரையும் முறையே பெயரிடுக.

agaram.lk

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

11. கோல்புருக் யோசனைகள் மூலம் நிலமானிய முறையை ஒழிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

12. பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சியின் கீழ் இனவாரிப்பிரதிநிதித்துவத்தை அறிமுகம் செய்ததும் அம்முறையை இல்லாதொழித்ததுமான இரு யாப்பு யோசனைகளையும் முறையே குறிப்பிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

13. டொனமூர் சட்டசபையின் பெயரையும், அதில் மக்களால் தெரியப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

14. 1931 – டொனமூர் யாப்பின் கீழமைந்த மந்திரிமார் சபையின் இருபகுதியினரையும், அவர்களின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

15. சோல்பரி யாப்பின் கீழ் அரசின் தலைவராக செயற்பட்டவரையும், அரசாங்கத்தின் தலைவராகச் செயற்பட்டவரையும் முறையே குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

16. சோல்பரி யாப்பின் கீழ் சிறுபான்மையினர் காப்பீடு ஆக அமைந்த விடயங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

17. 1972 முதலாம் குடியரசு யாப்பில் குடியரசின் உத்தியோக ரீதியான பெயரையும், நாம நிறைவேற்றாளரின் பெயரையும் முறையே எழுதுக.

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

18. இலங்கையின் மாகாணசபை முறையில் பிரதான நிறைவேற்று அதிகாரியாக செயற்படுபவரையும், மாகாணசபை முறையை அறிமுகம் செய்த யாப்பு திருத்தத்தையும் முறையே குறிப்பிடுக.

agaram.lk

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

19. 19 ஆவது யாப்புத்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் பதவிக்காலம், ஜனாதிபதி வேட்பாளருக்குரிய குறைந்தபட்ச வயதெல்லை என்பவை எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

20. 1978 யாப்பின்கீழ் அமைக்கப்பட்ட பாராளுமன்றம் இருபகுதி உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதனையும், அப்பகுதிகளினூடாக ஒழுங்கமைந்த உறுப்பினர் எண்ணிக்கையையும் எழுதுக.

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………]……………………………………

## பகுதி B

❖ **B மற்றும் C பகுதிகளிலிருந்து இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

*01. பிரயோக அரசியலிலிருந்து கோட்பாட்டு அரசியலை நீர் எவ்வாறு வேறுபடுத்துவீர்?*

*(20 புள்ளிகள்)*

*02. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றிக் கருத்துரைக்குக.*

- i) *தற்கால அரசியல் முறைமைகளின் சட்டத்துறையின் வகிபாகம்.*
- ii) *தற்கால அரசாங்கங்களின் நிறைவேற்றுத்துறையின் வகிபாகம்.*
- iii) *பொதுசன அபிப்பிராயத்தின் வகிபாகம்.*
- iv) *ஜனநாயக அரசியல் முறைமையில் சிவில் சமூகத்தின் வகிபாகம்.*

*(10X2=20 புள்ளிகள்)*

*03. பின்வரும் இரு விடயங்களையும் பரிசீலிக்குக.*

- i) *மந்திரிசபை அரசாங்க முறையின் நிறைகளும் குறைகளும்.*
- ii) *அனைத்தாண்மை அரசாங்கத்தின் பிரதான பண்புகள்*

*(10X2=20 புள்ளிகள்)*

*04. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு தலைப்புக்களை ஆராய்க.*

- i) *அமெரிக்க அரசாங்க முறையில் நிறைவேற்று அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான தடைகள்.*
- ii) *இந்திய அரசியலமைப்பின் சமஷ்டி மூலக்கொள்கைகள்*
- iii) *பிரித்தானிய கபினட் முறைமையில் நிறைவேற்றுத்துறை – சட்டத்துறைத் தொடர்புகள்.*
- iv) *சுவிட்சர்லாந்தின் சமஷ்டிப் பேரவை.*

*(10X2=20 புள்ளிகள்)*

## பகுதி C

*05. இலங்கையில் பிரித்தானியக் குடியேற்ற நாட்டாட்சியின் அரசியல் பொருளாதார, சமூக விளைவுகளை விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக.*

*(20 புள்ளிகள்)*

*06. பின்வருவனவற்றுள் இரண்டினைப் பரிசீலிக்குக.*

- i) *1931 டொனமூரில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமையால் ஏற்பட்ட விளைவுகள்.*
- ii) *1931 டொனமூரில் மந்திரிமார் சபை முறை.*
- iii) *சோல்பரி யாப்பின் கீழ் உண்மை நிருவாகத்தின் அதிகாரங்கள், பணிகள்.*
- iv) *சோல்பரி யாப்பின் கீழ் செனட் மன்றம் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள், அதிகாரங்கள் மற்றும் மற்றும் நிலை.*

*(10X2=20 புள்ளிகள்)*

*07. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு தலைப்புக்களைப் பகுப்பாய்வு செய்க.*

- i) *1972 யாப்பின் கீழ் சட்டத்துறையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை.*
- ii) *1972 யாப்பின் கீழ் நாமநிருவாகியின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை.*
- iii) *1972 யாப்பின் கீழ் அரசியல் யாப்பு நீதிமன்றம்*

*(10X2=20 புள்ளிகள்)*

*08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை 1978 யாப்போடு தொடர்புபடுத்தி ஆராய்க.*

- i) *ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறை.*
- ii) *விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் சாதக, பாதக விடயங்கள்.*
- iii) *உயர் நீதிமன்றின் அதிகாரங்களும் பணிகளும்.*
- iv) *நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்)*

*(10X2=20 புள்ளிகள்)*

agaram.lk